செ.வெ. எண்: 586 நாள்: 5.10.2011

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை –106.

2011 – 2012 ஆம் கல்வியாண்டுக்குரிய பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.என்.ஒய்.எஸ் / பி.யு.எம்.எஸ் மற்றும் பி.எச்.எம்.எஸ் மாணவர் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு சென்னை– 106 அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் கீழ்க்கண்டவாறு நடைபெறும். இக் கலந்தாய்வானது பாளையங்கோட்டையிலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் நாகர்கோவிலிலுள்ள அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி ஆகியவற்றைத் தவிர்த்து பிற அரசு மற்றும் சுயநிதி இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளுக்கு நடைபெறும். மேற்குறிப்பிடப்பட்ட இரு அரசு கல்லூரிகளுக்கு மட்டும், மத்திய அரசின் ஆயுஷ் துறையின் உரிய அனுமதி கிடைத்த பின்னர் தனியாக கலந்தாய்வு நடத்தப்படும்.

தகுதியான மாணவர்கட்கு தனித்தனியே கலந்தாய்வு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாத தகுதியான மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப்படி அவரவர்க்குரிய தரவரிசையின்படி கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் விவரங்களை www.tnhealth.org என்ற இணையதளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மாணவர்கள் கலந்தாய்விற்கு வரும் பொழுது அனைத்து அசல் சான்றிதழ்களையும் அல்லது பிற கல்லூரியில் படித்து வருவதற்கான சான்றிதழையும் ( Bonafide Certificate) மற்றும் உரிய கட்டணமான ரூ.5,500/= மட்டும் மதிப்பிலான, 1 / 10 / 2011க்கு பிறகு, இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை என்ற பெயரில் சென்னையில் காசாக்கதக்க தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக கொண்டு வர வேண்டும்.

### 2011–12 ஆம் ஆண்டிற்கான இந்திய மருத்துவ இளநிலை பட்டப் படிப்பிற்கான கலந்தாய்வு அட்டவணை

| நாள் | கிழமை | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|---|
| | | முற்பகல் 10.00 மணி முதல்<br>பிற்பகல் 1.00 மணிவரை | பிற்பகல் 2.00 மணி முதல்<br>மாலை 5.00 மணிவரை |
| 13/10/2011 | வியாழக் கிழமை | அனைத்து சிறப்பு பிரிவு மற்றும் பொது பிரிவு<br>தர வரிசை எண் 1 முதல் 51 வரை<br>கட் ஆப் மதிப்பெண்<br>197.00 முதல் 187.50 முடிய | தர வரிசை எண்<br>52 முதல் 202 வரை<br>கட் ஆப் மதிப்பெண்<br>187.25 முதல் 175.25 முடிய |
| 14/10/2011 | வெள்ளிக் கிழமை | தர வரிசை எண்<br>203 முதல் 355 வரை<br>கட் ஆப் மதிப்பெண்<br>175.00 முதல் 163.50 முடிய | தர வரிசை எண்<br>356 முதல் 502 வரை<br>கட் ஆப் மதிப்பெண்<br>163.25 முதல் 154.25முடிய |
| 15/10/2011 | சனிக் கிழமை | தர வரிசை எண்<br>503 முதல் 677 வரை<br>கட் ஆப் மதிப்பெண்<br>154.00 முதல் 143.25 முடிய | தர வரிசை எண்<br>678 முதல் 861 வரை<br>கட் ஆப் மதிப்பெண்<br>143.00 முதல் 130.00 முடிய |

செயலர், தேர்வுக் குழு

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.